★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: QB/3943 8

மலர்: 31 வைகாசி: 22 றஜப்: 9 இதழ்: 115

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 5-6-79

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS LIBRARY RECEIVED 1979-6-24 PERIODICALS DIVISION

வேலையில்லையா?
போதிய வருவாய் இல்லையா?
வழிகாட்டுகின்றோம்!
நியூ கேம்பிறிட்ஜ் டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
[திருநெல்வேலிச் சந்தி]
1. Transistor - Radio & Electronic
2. City & Guilds Telecommuuication Technicians Exam
3. London (A/C) ஆகிய வகுப்புகள் 19-06-79ல் ஆரம்பமாகின்றன.
4. G C E. உயர்தரம் [வர்த்தகம், விஞ்ஞானம்] புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

## அமைச்சர் திரும்பினார்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு தமது அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் வந்திருந்த உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு எஸ். பி. ஹேரத் பல இடங்களுக்கும் சென்று பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டுவிட்டு நேற்றுக் காலை ஹெலிகோப்டரில் கொழும்பு திரும்பினார்.

அமைச்சரிடம் கூறப்பட்ட புகார்களுக்கு அவர் அந்தந்த

(6-ம் பக்கம் பார்க்க)

# கம்பூச்சியா பிரதிநிதித்துவம் அணிசேரா கூட்டத்தில் இழுபறி!

(நமது கொழும்பு நிருபர்)

அணிசேரா நாடுகளின் இணைப்புப் பணியக மாநாட்டின் பூர்வாங்கக் கூட்டம் அதிகாரிகள் மட்டத்தில் நேற்றுக் கொழும்பில் பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கூடியபோது கம்பூச்சியாவின் பிரதிநிதிகளாக பொல் பொட் அரசின் பிரதிநிதிகளே அனுமதிக்கப்பட்டிருந்தனர். இதைத் தொடர்ந்து கம்பூச்சியாவிற்கு யார் பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டுமென்ற விவாதம் நேற்றைய கூட்டம் முடிவடையும் வரை இதுவரை எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

நேற்றைய கூட்டம் ஒரு மணி நேரம் தாமதித்து முற்பகல் 11 மணிக்கே ஆரம்பமானது. இலங்கையின் பிரதிநிதி திரு. பி. ஜே. பெர்னாண்டோ கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். அந்தரங்கமாகக் கூட்டம் நடைபெற்றது. நிருபர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

கம்பூச்சியாவின் பொல் பொட் அரசாங்கமே ஐ. நா. சபையில் பிரதிநிதித்துவம் வகிப்பதால் இந்த அணிசேரா மாநாட்டுக்கு பொல்பொட் அரசுக்கே அழைப்பு அனுப்பப்பட்டதாகக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

என்றாலும் கம்பூச்சியாவுக்கு அணிசேரா மாநாட்டில் யார் பிரதிநிதித்துவம் வகிக்கவேண்டுமென்பது பற்றிப் பதினொரு நாடுகளின் பிரதிநிதிகள் நேற்றைய விவாதத்தில் கலந்து கொண்டனர்.

அணிசேரா நாடுகளின் பூர்வாங்க மாநாட்டில் ஐந்து ஆபிரிக்க விடுதலை இயக்கங்களும், பாகிஸ்தான், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் அங்கத்தினர்களாகக் கலந்து கொள்கின்றன.

பொல்பொட் அரசின் பிரதிநிதிகள் மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ள அதேசமயம் கம்பூச்சியாவின் வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் இன்றைய கம்பூச்சியாவின் அரசுதான் சட்டரீதியான, அதிகாரபூர்வமான அரசு என்று தெரிவித்துள்ளது.

நேற்றைய அதிகாரிகள் மட்டக் கூட்டத்தில் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஒரு குழு பொருளாதார விஷயங்களையும், மற்றது அரசியல் விவகாரங்களையும் ஆராயும். [ம]

## ஆயுதம்காட்டி தாலிக்கொடி கொள்ளை

### தாவடியில் 3 இளைஞர்கள் கைவரிசை!

[யாழ்ப்பாணம்]

பயங்கரஆயுதங்களைக்காட்டி கணவனைப் பயமுறுத்தியபடி மனைவி அணிந்திருந்த தாலிக்கொடியை மூன்று இளைஞர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கொக்குவிலில் உள்ள தாவடியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றிவீரவாகு என்பவர் ஆனைக்கோட்டைப்பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டில்,

சம்பவதினம் தாம் பயணம் போவதற்காக அதிகாலை 3 மணிக்கு எழுந்து தமது மனைவியுடன் கிணற்றடிக்கு முகம் கழுவுவதற்காகச்சென்றதாகவும் அச்சமயம் கத்தி, கிறிஸ்போன்ற பயங்கர ஆயுதங்களுடன் 3 இளைஞர்கள் கிணற்றடிக்கு வந்ததாகவும், அவர்களில் இருவர் தங்களை அற்றவார்கள் அடையாளம் காணாதவாறு வாயில் துணி கட்டியிருந்ததாகவும், ஒருவர் கத்தியைக் காட்டித் தம்மைப் பயமுறுத்த வாயில் துணி கட்டியிருந்த இருவரும் தமது மனைவியைப் பயமுறுத்தி அவரது கழுத்திலிருந்த தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடிமறைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டைப்பொலிஸ் சார்ஜன்ட் டிசல்துரை கான்ஸ்டபிள் நாதன் ஆகியோர் மேற்படி சம்பவம் பற்றிப் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [கொ-க]

பரந்த அடிப்படையில்

## நாவலர் நூற்றாண்டு விழா கொண்டாட நடவடிக்கை!

### மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கலாச்சாரக்குழு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நூற்றாண்டு விழாவை கொண்டாடவிருக்கிறது' இதற்கு முன்னோடியாகப் பொது நிறுவனங்கள் இயக்கங்கள் மற்றும் அமைப்புக்களைக் கூட்டி ஆலோசிக்கப்படும். இதனையொட்டி யாழ்மாவட்டச் செயலாளரும் மாவட்டக் கலாச்சாரக்குழுத் தலைவருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அறிக்கை விபரம் வருமாறு:

இந்த ஆண்டு நாவலர் பெருமானுக்கு நூற்றாண்டு சைவத்திற்கும், தமிழிற்கும் பெருந்தொண்டாற்றிய அவருக்கு விழா எடுக்க வேண்டியது இந்தத் தேசத்து மக்களின் உன்னதமான கடமையாகும்.

'தமிழும் சிங்களமும் இந்த நாட்டின் இருபெரும் மொழிகளாக இருப்பது போல ஆறுமுகநாவலரும், அநாகரிக தர்மபாலாவும் இந்த நாட்டின் ஒப்பற்ற உன்னதமான புருஷர்களாக விளங்கியவர்கள் ஆவர்.

தேசிய உணர்விலதும், விழிப்பினதும் மகத்தான அடையாளமாக விளங்கியவர் நாவலர் பெருமான் கலாச்சார எழுச்சிக்கும், சமய மறுமலர்ச்சிக்கும் துயருற்ற மக்களின் விமோசனத்திற்கு அவர் கடுமையாக உழைத்திருக்கிறார். ஒரு தேசிய மரபின் புதல்வரான நாவலர் பெருமானுக்கு விழா எடுப்பதற்கு தாங்கள் எல்லாவித

[6-ம் பக்கம் பார்க்க]

## கைதடியில் மோதல்; இருபிரிவினர் மோதல்!

[யாழ்ப்பாணம்]

கைதடியில் ஒரு கோயில் திருவிழாவைத் தொடர்ந்து இரு சமூகத்தவருக்கிடையில் ஏற்பட்ட தகராறு பயிர்களுக்கும் வீடுகளுக்கும் சேதம் ஏற்படுத்தி பெரும் மோதல் ஏற்படுத்தக்கூடிய ஒருநெருக்கடியான சூழ்நிலையைத் தோற்றுவித்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

நிலைமையைச் சமாதானமாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெரும் நெருக்கடி ஏற்படாமல் தடுப்பதில் பொலிசாரும் கடமையிலீடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் சமூக சேவை இயக்கங்களும் ஈடுபட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

இதுசம்பந்தமாகத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவர் திரு எஸ். ரி. என். நாகரத்தினம் நேற்று விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இப்பிரச்னையை சகல ஒடுக்கப்பட்ட மக்களினதும் நல்லெண்ணம்கொண்ட சகல தமிழ்மக்களினதும் பொதுவான நாட்டின் பிரச்னையாகவும் இதைக்கொள்ளவேண்டுமென்றும் சகல நல்லெண்ணம் கொண்ட மக்களினதும் ஆதரவு தேவையென்றும் வேண்டுகோள் விடுத்தார்.

### துன்னாலையில்

துன்னாலை வடக்கு முருகையா கோவிலில் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட ஆலயப்பிரவேச முயற்சியைத் தொடர்ந்து பரபரப்பான சூழ்நிலை தோன்றியுள்ளதாக தமது உடுப்பிட்டி நிருபர் தெரிவிக்கிறார்.

## பரு. யு.என்.பி. பிரமுகருக்கு துப்பாக்கி இளைஞர் பயமுறுத்தல்

### 15 நாட்களுக்குள் கட்சியிலிருந்து விலகும்படி காலக்கெடு

(புலோலி)

"15 நாட்களுக்குள் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்துவிட வேண்டும். இல்லையேல் எங்கள் துப்பாக்கிக்கு இலக்காகுவீர்"

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகராகப்போட்டியிட்ட இ போ ச பஸ் சாரதி கே. மகேசனுக்கு 3 துப்பாக்கி இளைஞர்கள் காலக்கெடு விதித்து எச்சரித்துள்ளனர்.

மகேசன் வீட்டிற்கு துப்பாக்கியுடன் நேற்று முன்தினமிரவு சென்ற 3 இளைஞர்கள் கதவில் தட்டி அவரைக் கூப்பிட்டதாகவும், வீட்டில் அவர் இல்லாததனால் மகன் வெளியில் வந்ததாகவும் மகனை முகத்திலும், தலையிலும் தாக்கினார்களென்றும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது.

மகனைத் தாக்கியபின் 3 இளைஞர்களும் ஒரு எச்சரிக்கைக் கடிதத்தைக்கொடுத்து 15 நாட்களுக்குள் யு என் பி யிலிருந்து உமது தகப்பன் ராஜினாமாச் செய்துவிடவேண்டும் இல்லாவிடில் எங்கள் துப்பாக்கி பதில் சொல்லும் என எச்சரித்துவிட்டுச் சென்றனராம்.

அயலவர்களின் பயத்தினால் ஓடிவிட்டார்களென்றும் கூறப்படுகிறது

மகன் கடிதத்தை பருத்தித்துறை பொலிஸில் ஒப்படைத்து புகார் செய்துள்ளார்.

பொலிஸார், இப்புகாரைத் தொடர்ந்து வாகனங்களையும் சில வீடுகளையும் சோதனையிட்டுள்ளனர். சந்தேகநபர் எவரும் கைதாகவில்லை. [க]

## நவத்துக்கு இன்று 51 வயது

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி எம். பி திரு வ ந நவரத்தினத்தின் 50 வயது நிறைவையொட்டி இன்றுசாவகச்சேரித் தொகுதியிலுள்ள சகல இந்து, கிறிஸ்தவ ஆலயங்களிலும் பள்ளிவாசலிலும் விசேட ஆராதனைகள், தொழுகைகள் இடம்பெறவுள்ளன

இதற்கான சகல ஏற்பாடுகளையும் சாவகச்சேரித்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளைகள் செய்துள்ளன. அத்துடன் இன்று இளைஞர் தலைமை பயிற்சிப்பட்டறை நடைபெறும் கைதடி சைவ அநாதை இல்லத்திலும் கொடிகாமம் சுட்டிபுரம் அம்மன் ஆலயத்திலும் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

# மஸாச்சுசெட்ஸ் தமிழ்ஈழம் தீர்மானம்

# அமெரிக்காவிடம் இலங்கை ஆட்சேபம்

(கொழும்பு)

ஈழத்தமிழர்பிரச்சினை குறித்த 'தமிழ் ஈழம்' தொடர்பாக அமெரிக்க மஸாச்சுசெட்ஸ் மாநிலசட்டசபையில் கடந்த மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து இலங்கை அரசு அமெரிக்க அரசாங்கத்திடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இலங்கைஅரசின் ஆட்சேபம் இலங்கையிலுள்ள அமெரிக்க ஆதர உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுபான்மையினராக இருக்கும் தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு அநீதி இழைத்து வருகிறது. எனவே இவ்விவகாரத்தில் அமெரிக்க காங்கிரஸும் அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மி கார்ட்டரும் தலையிட்டு இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு கோரும் தீர்மானம் கடந்த மே மாதம் 10ம் திகதி மஸாச்சுசெட்ஸ் மாநில சட்டசபையில் நிறைவேற்றியது தெரிந்ததே. [இ]

## மல்லாகம் மாதர்மன்றத்தின் சர்வதேச சிறுவர்தினவிழா

(மல்லாகம்)

மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் அனுசரணையுடன் மல்லாகம் மாதர் மன்றம் நடாத்தும் 'சர்வதேச சிறுவர் தினவிழா' இம்மாதம் 9ம் திகதி சனிக்கிழமை கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

திருமதி ம. சபாரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் விநோத உடைப்போட்டி, விளையாட்டுப்போட்டிகள் சிறப்பம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன என்று மாதர் சங்கச் செயலாளர் திருமதி பாலாம்பிகை சிறி பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

பிரதமவிருந்தினராகதிருமதி இராஜராஜேஸ்வரி வன்னியசேகரம் கலந்துகொண்டு பரிசில்கள் வழங்குவார். (ஈ)

## 5 இளைஞர்களுக்கு றிமாண்ட்

[மாவிட்டபுரம்]

கொழும்பிலிருந்து வந்த விசேட குற்றப் புலனாய்வுத் துறை பொலிஸ் கோஷ்டியினால் தடைசெய்யப்பட்ட இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 11ம் திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வந்து விசாரணை நடத்திய இன்ஸ்பெக்டர் திரு கருணாநாயக்கா தலைமையிலான விசேட பொலிஸ் கோஷ்டி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வீடொன்றில் வைத்து வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நா. குமாரசெல்வம், ஜே. துரைசிங்கம், சே. குலநாயகம், உடுப்பிட்டியைச் சேர்ந்த இ. தவம், இளவாலையைச் சேர்ந்த பீ. நவநீதராசா ஆகிய 5நபர்களையும் கைது செய்து காங்கேசன்துறை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

இந்நபர்களை காங்கேசன்துறைப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் நீதிபதி திரு எஸ். ஆனந்தக்குமாரசாமி இம்மாதம் 11ம் திகதிவரை அவர்களை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். [இ]


## வரி விளம்பரம்

### குத்தகைக்கு

நாவற்குழி வேலம்பிராயில் உள்ள வைரவிப்பிள்ளை தோட்டத்தில் தனியாருக்கோ கள் உற்பத்தி சங்கங்களுக்கோ 1979 ஜூலை தொடக்கம் 1980 ஜூன் வரை கள் உற்பத்திக்கு குத்தகைக்கு கொடுக்க ஒரு தொகை தென்னைமரமுண்டு. விரும்புவோர் 1979 ஜூன் 6 புதன்கிழமை அல்லது 7 வியாழக்கிழமை காலை அத்தோட்டத்தில் சிதம்பரநாதருக்கு குத்தகைப்பணம் முழுவதையும் முற்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம் 2611

### தேவை

ஆங்கில தட்டச்சு/லிகிதர் (பெண்) தேவை. மூன்று வருட அனுபவமுடையவர் விரும்பத்தக்கது. கல்வி, அனுபவம் முதலிய சான்றிதழ்களுடன் 10-6-79 முன் விண்ணப்பிக்கவும். Office Equipment Ltd, 34, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 2665

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## புனரமைப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டியில் இம்மாதம் 10ம் திகதி கரவெட்டி ஐக்கிய தேசியக்கட்சிக் கிளை புனரமைப்புக்கூட்டம், கிளைத் தலைவர் திரு. எம். சிவகுமாரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. [ச-அ]


## நன்றி அறிவித்தல்

அமரர் பேராசிரியர் சோ. செல்வநாயகம்

23-5-79ல் இறைவனடி சேர்ந்த பேராசிரியர் சோ. செல்வநாயகம் அவர்களின் இறுதிச்சடங்கில் நேரில் கலந்துகொண்டும் தந்தி, தபால் மூலமும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் விசேஷமாக மரணச்சடங்கில் பெரும் பங்கு கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவ மாணவிகள், விபத்து ஸ்தலத்திலிருந்து பேராசிரியரை ஆஸ்பத்திரியில் சேர்த்த திரு சங்கரப்பிள்ளை கனகரத்தினம் ஆகியோருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருமதி த. செல்வநாயகமும், பிள்ளைகளும், குடும்பத்தினரும்.

104, பலாலி வீதி, யாழ்ப்பாணம். 2561

விண்ணக வாழ்வின் 31-ம் நாள் நினைவு தினம்



நினைவிலே நாளும் நிலைத்திருப்பாய் நெஞ்சத்தில் என்றும் நிறைந்திருப்பாய்

இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற 5-6-79 செவ்வாய்க்கிழமை யாழ் அடைக்கலநாயகி தேவாலயத்தில் இரங்கற்பலி ஒப்புக்கொடுக்கப்படும். சீவியத்தில் இவரை நேசித்தவர்களே மரணத்திலும் இவரை மறவாது உங்கள் செபங்களில் அவரை நினைவுகூர வேண்டுகிறோம்.

யே. மாட்டீன் (இளைப்பாறிய ஆசிரியர்)

பிறப்பு: 12-11-1918 இறப்பு: 6-5-1979

181, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2659

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### தங்கம்மா சங்கரப்பிள்ளை

இவர் காலஞ்சென்ற கைதடி மகாவித்தியாலய அதிபர் M S, சங்கரப்பிள்ளையின் அருமை மனைவியும் செல்வராசா (எஸ். எம். சிறீவஸ்திபுரா), தங்கராணி (சுண்டிக்குளி), டாக்டர் சிங்கராஜா (எம். ஓ. எச். கோட்டே), அரியராசா, அரியராணி (கனடா), நேசராசா (கனடா) ஆகியோரின் தாயாரும், பொன்மணி, M. C பிரான்சிஸ், சகுந்தலா, புரவெசர் S. T. அரியரட்ணம் (கனடா), விமலா (கனடா) ஆகியோரின் மாமியாரும், M S. தம்பித்துரை (சுண்டிக்குளி), காலஞ்சென்ற பாக்கியம் வல்லிபுரம் ஆகியோரின் சகோதரியுமாவார். இவரின் பூதவுடல் நாளை புதன்கிழமை 4 மணிக்கு 9/2, ஈச்சமோட்டை வீதியில் நிகழும் மரண ஆராதனையின் பின் நல்லடக்கத்துக்காக சாவகச்சேரி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

2658


## இன்றைய பலன்

வைகாசி மாதம் 22-ம் திகதி [செவ்வாய்க்கிழமை]

(5-6-1979)

**மேடம்:** முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடன்படவும் நேரிடலாம், நண்பர்களாலும் நஷ்டமடைவதற்கு இடமுண்டு.

**இடபம்:** நீண்டநாள் பிரச்னையில் இன்று சமரச முடிவு காணப்படும், மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொள்வீர்கள், அரசியலில் சிலருக்கு ஆர்வம் பிறக்கக் கூடும்.

**மிதுனம்:** தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கு இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் நடைபெற்ற பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

**கடகம்:** பொருளாதார நிலை சிறக்கும், சிலர் வாழ்க்கையில் எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு, பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம், வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

**சிம்மம்:** அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும், உடல்நலம் பாதிக்கப்படலாம், வீண்பொருள்களினால் பணம் விரயமாகலாம், அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

**கன்னி:** மனக்கோட்டை கட்டுவீர்கள், எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும், அன்புச் சகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம், அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**துலாம்:** ஒளிமயமான சூழ்நிலை உருவாகும், வீட்டிலுள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும், இருமனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் இடம்பெறும்.

**விருச்சிகம்:** பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும், உதவி செய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்வீர்கள், அரச பயத்திற்கு இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

**தனுசு:** உறவுகள் பலப்படும், உள்ளத்தில் உவகை துள்ளும், உயர்வுக்கு வழிபிறக்கும் உவப்பான தினம்.

**மகரம்:** நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று பொன்னான நாள், தொழில் புரியும் இடத்தில் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

**கும்பம்:** பகைவர்கள் பதுங்குவர், பாதையில் தடைகளுண்டு, நம்பிக்கை மோசடி மூலம் பணமும் பறிபோகலாம், முன்னெச்சரிக்கை நன்று.

**மீனம்:** இல்லறத்தில் இனிமை தவழும்- வெளியிடத் தொடர்புகள் பெருகும், இனசனங்களின் உதவியுடன் செல்வாக்கும் உயரும்.

சோதிடக்கலாநிதி
திருமதி க. வேலுப்பிள்ளை

செல்வா நினைவகத்திற்கு

# முதல்மாதப்படியை உதவுங்கள்

## புதிய மாநகர - நகரசபை உறுப்பினர்களுக்கு வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

தந்தை செல்வா நினைவகத்தை பூர்த்திசெய்ய பணம் போதாமல் இருப்பதால் அந்த நினைவகத்தை பூர்த்திசெய்ய தமிழர் விடுதலைக் கூட்டணி மாநகர சபை உறுப்பினர்களும், நகரசபை உறுப்பினர்களும் தமது முதல் மாதப்படியை அந்நிதிக்கு அளிக்க வேண்டும்.

இவ்வேண்டுகோளை தந்தை செல்வாவின் அறங்காவற்குழுவின் செயலாளர் திரு. ச. சச்சிதானந்தன் யாழ்ப்பாணம் மாநகரசபை, திருமலை, வவுனியா, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகர சபைகளின் தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர்களைக் கேட்டுள்ளார்.

அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தாங்கள் வெற்றிபெற்றமை மூலம் தமிழ்மக்களின் விடுதலை உணர்வுகட்கு உத்வேகம் தந்து, தந்தை செல்வாவின் கனவுகள் நனவாக வழிவகுத்துள்ளீர்கள்.

வளர்ந்துவரும் தந்தை செல்வாவின் நினைவகம் கட்டி முடிவுறும் நிலையை எய்தியுள்ளது. நிதி பற்றாக்குறையால் அவதிப்படும் எமக்கு, தங்களின் முதல் மாதப்படியை அனுப்பி உதவுமாறு வேண்டுகிறேன். (இ)


33 ஸ்ரீ 3126 பெட்போட் (BEDFORD) வான் விற்பனைக்குண்டு

தொடர்பு கொள்ளவும்
த பிறின்ஸ் கம்பனி லிமிட்.
191, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன: 7680

## மக்கள் கருத்து

### கோணேசர் கல்வெட்டு!

யாழ். தொல்பொருள் துறை பிரதேச அதிகாரி திரு. ம. பொ. செல்வரத்தினம் அவர்கள் 30-5-79ம் திகதி ஈழநாடு பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் (ஆதி வழுக்கி ஆற்றங் கரை உதித்த திருத்தலங்கள்) கோணேசர் கல்வெட்டுப் பற்றி எழுதுகையில் முன்னே குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியைப் பின்னே பறங்கி பிடிப்பானே- பொன்னும் பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணனு விட்டின் புதானும் தமிழாய் விடும் என்று கூறுவதாக திரு. சி. இராசநாயகம் முதலியார் பண்டை யாழ்ப்பாணம் என்னும் நூலில் பிரசுரித்ததாக எழுதியுள்ளார். முதலாவதாக திரு சி. இராசநாயகம் முதலியார் அவர்கள் எழுதிய நூலுக்குப் பெயர் ''யாழ்ப்பாணச் சரித்திரம்'' இந்த நூலிலே 80ம் பக்கத்திலே கோணசர் கல்வெட்டைப்பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

திருகோணமலைக் கல் நிலையில் இப்போது தெளிவாகவிருக்கும் எழுத்துக்களாவன.

னனேகுள
காடமூட்டு
ருப்பணியை
னனே பறங்கி
கவே மன்ன
னபொண்ணு
னயபற
தேவைதி
ணு
கள

போர்த்துக்கேயத் தானைத் தலைவன் எழுதிய பிரகாரஞ் சாசனத்தைப் பின்வருவாறு வெண்பாவாக முற்றுவிக்கலாம் அவ்வாறு அழிந்து போன எழுத்துக்கள் அடைத்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

(மு)ன்னேகுள(க்)
(கோ)ட(ன்) மூட்டு(ந்)
(தி)ருப்பணியை (ப்)
(பி)ன்னே பறங்கி (பி)
(ரி)க்கவே மன்ன (வ)
(பி)ன் பொண்ணு (த)
(த)னையிலற்ற (வழி)
(த)தேவைத் [து!
[எண்] ணு ]ரேபின்]
[னரசர்] கள்.

முன்னே குளக்கோடன் மூட்டுந் திருப்பணியைப் பின்னே பறங்கி பிரிக்கவே- மன்னவ பின் பொண்ணு ததனையற்ற வழித் தேவைதத எண்ணுரே பின்னரசர்கள்,

(இவ்வெண்பா வண்ணார் பண்ணை தெ. வை. செகவீரபாண்டியனார் தமிழ்ப் பண்டிதராக நிறைவேற்றி உதவியது)

திரு. செல்வரத்தினம் அவர்கள் குறிப்பிட்ட கருத்து யாழ்ப்பாண வைபவமாலை என்ற வேறொரு நூலில் அதன் ஆசிரியர் திரு மயில்வாகனப் புலவர் அவர்களால் கூறப்பட்டதாகும் முதலியார் திரு. இராசநாயகம் அவர்கள் திரு. மயில்வாகனப் புலவரின் கருத்தை மறுத்துத் தனது நூலில் இவ்வாறு கூறியுள்ளார்.

''சரித்திர வாராய்ச்சியோடொட்டிப் பார்ப்பின் திருக்கோணச்சரக் கோவிற் பிரகாரத்திலேயுள்ள கல்வெட்டொன்றில் அக்கோவிற்றிருப் பணியைப் பறங்கிகள் பிரிப்பாரென்றும் அதன்பின் அக்கோயில் கட்டுப்படமாட்டாதென்றும் அத்திருப்பணியைப் பற்றிய பின்வரும் அரசர்கள் எண்ணமாட்டார்கள் என்றும் வரையப்பட்டு இருந்ததென கி. பி. 1624ல் திருக்கோணசர் கோவிலையிடித்து அக்கற்களைக் கொண்டே கோட்டையெழுப்பிய கொன்ஸ்தாந்தீனு தே சா (Constantino de sa) என்னும் போர்த்துக்கேய படைத்தலைவன் எழுதியிருக்கும் கூற்றால் புலனாகிறது''

முதலியார் திரு சி. இராசநாயகம் அவர்கள் 131 ஆங்கிலச் சுவடிகளையும் 74 தமிழ் நூல்களையும், 27 சமஸ்கிருத, பாளி, சிங்கள நூல்களையும் ஆராய்ந்து எழுதியது 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூல். ஆகவே நூல்களுடைய பெருமைக்குப் பங்கம் வராவண்ணம் அந்நூல்களின் கருத்துக்களை எடுத்தாள்வது ஆராய்ச்சியாளர்களின் கடமையாகும்.

ந. சுரேந்திரன்
கன்னாதிட்டிவீதி,
யாழ்ப்பாணம்.

# காங்கேசன்துறைமுகம் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்படும்

## உணவு கூட்டுறவு அமைச்சர் தகவல்

(மாவிட்டபுரம்)

''காங்கேசன்துறை துறைமுகத்தைப் படிப்படியாக அபிவிருத்திசெய்ய நான் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதுடன் கொழும்பு திரும்பியதும் இங்கு கப்பல் ஒன்றை அனுப்பிவைப்பேன். மேலும் அடிக்கடி இங்கு கப்பல்களை அனுப்புவேன்''

இவ்வாறு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஹேரத் காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள உணவுக் களஞ்சியத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்

காங்கேசன்துறைக்குவிஜயம் செய்த அமைச்சருக்கு இங்கு குதூகல வரவேற்பளிக்கப்பட்டது.

காங்கேசன்துறை நியூகோஸ்தாபனத்தின் முன்வைத்து திரு க. அருபாமூர்த்தியும், ஜெயபாலசிங்கம் அன் கம்பனி முன்வைத்து திரு க. ஜெயபாலசிங்கமும் அமைச்சருக்கு மாலை அணிவித்துவரவேற்றனர்.

வரவேற்பையடுத்து உணவுக் களஞ்சியத்தை அமைச்சர் திறந்து வைத்துப்பேசுகையில் மேலும் கூறியதாவது:

''இவ்வுணவுக்களஞ்சியங்கள் வடபகுதி மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதம், அவர்களுக்கு தங்குதடையின்றி உணவுப் பொருட்களை விநியோகிக்க இவை உதவும்.

இங்கே திறக்கப்பட்டுள்ள இக்களஞ்சியங்கள் ஐந்து மாதங்களுக்குத் தேவையான அரிசி, மா, சீனி ஆகிய அத்தியாவசியப் பொருட்களைச் சேமித்துவைக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது

இதனால் வடபகுதியில் அத்தியாவசியப்பொருட்களுக்கு இனிமேல் எதுவித தட்டுப்பாடும் ஏற்படாது.

திரு ஜே ஆர். ஜெயவர்த்தன தலைமையிலான எமது அரசு அபிவிருத்திவேலைகளில் எதுவிதபாகுபாடும் காட்டாது சகல மாவட்டங்களை சமமான முறையில் அபிவிருத்தி செய்யும் ''

திரு க ஜெயபாலசிங்கம் பேசுகையில், ''முன்னைய அரசின் 7 வருடகால ஆட்சியில் இத்துறைமுகத்தை அபிவிருத்திசெய்யுமாறும் இப்படியான களஞ்சியங்களை அமைக்குமாறும் நான் பலமுறை வற்புறுத்தியும் அவர்கள் அதை புறக்கணித்துவிட்டனர். இந்த அரசு பதவியேற்று 2 வருடங்களில் இப்படியான பெரிய களஞ்சியங்களை இங்கு அமைத்துத்தந்தது பெரிதும் பாராட்டத்தக்கது. தொடர்ந்தும் இத்துறைமுக வளர்ச்சிக்கு அரசு உதவுவதுடன் துறைமுகத் தொழிலாளர்களது கஷ்டங்களையும் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து வசாவிளான் தோலகட்டி பண்ணைக்கும் கிரிமலைக்கும் அமைச்சர் விஜயம் செய்து பார்வையிட்டார். ]இ]

# நாடு சுபிட்சம்பெற சிறந்த வழிகாட்டல் மிகஅவசியம்

## தேசிய தொழிற் பயிற்சிச்சபை கருத்தரங்கில் பிரதிப்பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

''இளம்தலைமுறையினருக்கு ஏற்ற சிறந்த வழிகாட்டலின் மூலமே எதிர்காலத்தில் இந்த நாட்டில் சுபிட்சத்தை ஏற்படுத்தமுடியும், இளம்தலைமுறையினரின் திறமையறிந்து அவர்களை நாம் வழிநடத்தினுல் சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களை நாம் உருவாக்கலாம்.

இவ்வாறு நேற்று வைத்தீஸ்வராக் கல்லூரியில் தேசிய தொழிற்பயிற்சிச் சபையின் சார்பில் நடைபெற்ற தொழில்நுட்பப் போதனாசிரியர்களுக்கான மாவட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய தொழிற்பயிற்சிச் சபையின் பிரதிப்பணிப்பாளர் திரு. டி. ஜே. நாணயக்காரா கூறினர்.

அவர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது; பயிற்சிநெறிகளை போதனாமுறைப் பயிற்சி தொழிற்பயிற்சி முறை என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். உலகத்திலுள்ள நெறிமுறைகளில் அதிக பழமையானது இந்தப் பயிற்சி முறைப் போதனையாகும்.

இந்தமுறை மனிதனுல் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் விலங்கினங்களாலும் பறவைகளினுலும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதற்கு உதாரணமாக நாம் சிறு குருவிகளைப் பார்க்கலாம். தாய்க்குருவி கூடு கட்டுவதற்கு தன் குஞ்சிற்குப் பழக்குகின்றது. அவை எந்தக் கல்லூரிக்கும் போகவில்லை. அதேபோலத்தான் யானையும் தன் குட்டிக்கு சரப்பிடுவதற்கும் குளிப்பதற்கும் கற்றுத்தருகிறது. இதேமுறையைத்தான் நாம் இன்று கற்றுத் தருகின்றோம், இந்தமுறை கூட இன்று நேற்றல்ல வேடர் காலத்தில் இருந்தே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. காட்டு வழியாக தன்மகனை அழைத்துச் செல்கின்ற வேடன் ஒருவன் அக் காட்டில் எழுகின்ற ஒலியை வைத்தே தன் மகனிடம் என்ன மிருகம் வருகின்றது எப்படிப்பட்ட மிருகம் என்று சொல்லிக்கொடுக்கின்ருன். அதேபோன்று ஒரு தொழிற்சாலையில் பயிற்சிபெறுகின்ற மாணவருக்கு, போதனாசிரியர் அங்கு அடிக்கப்படும் இரும்பில் இருந்துஎழுகின்ற சத்தத்தைக் கொண்டே இது என்னவகை இரும்பு, இது கூரமானதா? இல்லையா? என்பனவற்றைக் கற்றுத்தருகின்ஞர்கள்.

இவைபோன்ற பயிற்சிகளை அந்த அந்த இடங்களிலேயே மேற்கொள்ளவேண்டும். அப்போதுதான் உண்மைநிலைமைகளை உணரமுடியும். நாம் எல்லோரும் தொழில்செய்யும் கருவிகளுக்குமதிப்புக்கொடுக்க வேண்டும் அப்போதுதான் நாம் எத் தொழிலும் முன்னேற்றம் அடையலாம்.

1971ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய தொழிற்பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக இயங்கிவருகிறது.

இலங்கையில் 65 வீத மாணேர் வறுமைகாரணமாக 7ம் வகுப்புடனேயே பாடசாலையை விட்டு வெளியேறிவிடுகின்றனா. இந்த 65 வீதத்தில் 30 வீதமானோர் ஜி. சி. ஈ. சாதாரண தரத்துடன் பாடசாலையைவிட்டு வெளியேறி விடுகின்றனர். 5 வீதத்தினர் மட்டுமே உயர் கல்விபெறுகின்றனர்,

இந்நிலையில் இளம்வயதில் பாடசாலையை விட்டு விலகிவிடும் அநேகருக்கு சம்பளமும் கொடுத்து வேலையும் வழங்கிவருகிறது.

பல்தொழில்நுட்ப உப அதிபர் திரு எஸ் இராஜேந்திரா தமதுரையில் கூறியதாவது!

இச்சபையின் பணி மிகச் சிறந்ததொரு சேவையாகும். இச்சபையில் பயிற்சிபெறுகின்ற மாணவர்களுடைய மனநிலையை அறிந்து அவர்கள் திறனறிந்து அவர் அவருக்கு ஏற்றதுறையில் போதிக்க வேண்டும்.

இப்பகுதியில் வாழுகின்ற தொழிலதிபர்கள் தமது தொழில்நிலையங்களில் இவர்களை பயிற்றுவிக்கமுன்வர வேண்டும் இந்தப்பகுதி இளைஞர்களுக்கு சிறந்த ஆய்வு கூடவசதிகள் அளிக்கப்படுவதில்லை, அத்தகைய வசதிகள் அளிக்கப்படும் பட்சத்தில் நிச்சயமாகத் தொழிற்திறமை வாய்ந்த பல தொழில் நுட்ப வியலாளர்களை நாம் பெற்றுக்கொள்வோம் என்பது உறுதி

இளம்சந்ததியினரிடம் மன உறுதியையும் திடசங்கற்பத்தையும் ஏற்படுத்த இத்தகைய பயிற்சிவகுப்புகள் மிகவும் பயன்படும்

இலங்கைஜேர்மன் தொழில்நுட்பக்கல்லூரி விரிவுரையாளர் திரு. சுந்தரலிங்கம் தமது உரையில் கூறியதாவது! வருடா வருடம் நமது நாட்டிலிருந்து பல இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கிருர்கள். இவர்களில் சரியான தொழிற்பயிற்சிபெற்றவர்கள் மட்டுமே அங்கு நல்லநிலையிலும் இருக்கிஞர்கள் எனவே தொழிற்பயிற்சி எமது நாட்டு இளைஞர்களுக்கு மிக அவசியம். எந்தநாடாக இருந்தாலும் தொழிற்திறனும் தொழில்நுட்பமும் உள்ள இளைஞர்களுக்கே முக்கியத்துவமளிக்கின்றது.

தொழில்நுட்பத்தையும் தொழிற்திறனையும் நானே பெற்று எனக்கு மட்டும் நற்பெயர் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமின்றி எம்மிடம் இருக்கின்ற அறிவையும் தொழிற்திறனையும் எவர் எவர்க்கெலாம் போதிக்க முடியுமோ அவர்களுக்கு எல்லாம் போதித்து அவர்கள் மூலம் இந்த நாட்டின் எதிர்காலம் சுபிட்சமானதாக உருவாக வழியமைக்கவேண்டும்,

[கா-இ]

## இணுவில் கந்தசுவாமி உற்சவம்

[யாழ்ப்பாணம்]

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது எதிர்வரும் 23ம் திகதி இரதோற்சவம் நடைபெறும்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தீர்ப்புப்படி கோவில் வாக்காளர் இடாப்பு கோவில் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், தர்மகர்த்தா சபைத் தேர்தல் மிகவிரைவில் நடைபெறவிருப்பதாகவும் தற்காலிக தலைவர் திரு வி மாகுமாரசாமி அறிவித்துள்ளார்

0 0 0

### சண்டிலிப்பாயில்

சண்டிலிப்பாய்ஆலங்குளாய் முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் 7-ம்திகதி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. [கு-அ]

ஃ ஃ ஃ

### புளியங்கூடல் மகாமாரி

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை புளியங்கூடல் அருள் மிகுதேவி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 16ம் திகதி தேர்த்திருவிழாவும் 17ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்

தினமும் இரவு 'சம்பூர்ண இராமாயணம்' என்னும் பொருள்பற்றி நல்லை ஞானசம்பந்தர் ஆதீன ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தொடர் இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார். [•]

## பஸ் சேவை சங்குவேலிவரை நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் திருநெல்வேலி ஊடாக உடுவில் வரை சேவையிடுபடுத்தப்பட்ட 764 பாதை இலக்க பஸ்சேவை, நேற்று முன்தினம் முதல் சங்குவேலிவரை நீடிக்கப்பட்டுள்ளது. புதிய சேவையை மானிப்பாய் எம். பி திரு வி தருமலிங்கம் ஆரம்பித்துவைத்து உரையாற்றினார்

[illegible] உரையாற்றுகையில், 'இவ்வூர் மக்களின் வேண்டுகோளை ஏற்று வடபிராந்திய [illegible] திரு [illegible] தகுந்த முறையில், இச்சேவையை [illegible] வேலிவரை நீடித்தமைக்கு, இப்பகுதி மக்கள் [illegible] பாராட்டுகிறேன் என்றார்

வைபவத்தில் சங்குவேலி கி. மு. சங்கத் தலைவர் திரு வே. அரசரத்தினம், திரு க பூதத்தம்பி உட்படபலர் உரையாற்றினர். (கே-இ)

# இடிஅமின் ஆதரவுப்படைகள் உகண்டாவில் இல்லை

## புதிய அரசு அறிவிப்பு

கம்பாலா, ஜூன் 4

முன்னாள் உகண்டா ஜெனரல் இடிஅமினின் படைகள் உகண்டாவின் எப்பகுதியிலும் தற்பொது நிலைகொண்டிருக்கவில்லை என்று உகண்டா அரசு தெரிவித்துள்ளது.

உகண்டாவின் சூடான் எல்லைவரை அரசபடைகள் தன்சானியப் படைகளுடன் இணைந்து தேடுதல் நடத்தியதாகவும் அரசு அறிவித்துள்ளது.

உகண்டாவிலிருந்து வெளியேறிய அமினின் படைகள் பல இடங்களில் பொதுமக்களிடமிருந்து பல பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## தஞ்சை-நாகை உபதேர்தல் பிரசாரம்

# தமிழக அரசுமீது கருணாநிதி கண்டனம்!

சென்னை ஜூன் 4

"தஞ்சையிலும் நாகையிலும், தமிழக அரசு நிர்வாகம், தேர்தல் பிரசார வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது."

இவ்வாறு, தி. மு. க தலைவர் சென்னையில் பத்திரிகையாளருக்கு பேட்டியளிக்கையில் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து தேர்தல் கமிஷனரிடம் முறைப்பாடு செய்யப்போவதாகவும் அவர் கூறினார். [இ]

# தமிழக பொலிஸார் தொழிற்சங்கம் அமைப்பர்

## எம். ஜி. ஆர். தகவல்

சென்னை, ஜூன் 4

தமிழ் நாட்டு பொலிசாருக்கு தொழிற்சங்கம் அமைக்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

இத்தகவலை தமிழக முதல் மந்திரி திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழகப் பொலிசார் மிகவும் கட்டுப்பாடுடைய படையினர் என்ற நற்பெயரை அவர்கள் தொடர்ந்து பேணிப்பாதுகாப்பார்கள் என்றும் திரு. இராமச்சந்திரன் தெரிவித்தார். [இ]

## தட்சரின் முதலாவது வெளிநாட்டுப் பயணம்

லண்டன், ஜூன் 4

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் தமது வெளிநாட்டுப் பயணமாக நாளை செவ்வாய்க்கிழமை பிரான்சுக்கு விஜயம்செய்கிறார். அவருடன் பிரிட்டிஷ் வெளிநாட்டுக் காரியதரிசியும் செல்கிறார். [இ]

## இன்று கூடுவர்

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தேசிய போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை உரும்பராயில் தாய்ச் சங்கத் தலைவர் திரு. எம். மதநாயகா தலைமையில் நடைபெறவுள்ளது [கொ-அ]

## 'தேவிமஹத்துவம்'

[யாழ்ப்பாணம்]

வண்ணை இலங்கை லேன் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அலங்காரத் திருவிழாவை முன்னிட்டு இன்று முதல் 12ம் திகதிவரை தினமும் மாலை பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா பக்கவாத்திய சகிதம் 'தேவி மஹத்துவம்' என்னும் பொருள்பற்றி தொடர் விரிவுரை நிகழ்த்துவார். [இ]

## ஆஸ்பத்திரியில் நெடுஞ்செழியன்

சென்னை, ஜூன். 4

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகபொதுச்செயலாளர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் இருதயநோய் காரணமாக சென்னை பொது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் தீவிர இருதய சிகிச்சைவார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## திருமணத்துக்கு வற்புறுத்தியதால் யுவதி தற்கொலை

[யாழ்ப்பாணம்]

திருமணத்தை உடனே நடாத்தவேண்டும் என்று தாயார் வற்புறுத்தியதால் மனமுடைந்த இளம்பெண் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

யாழ்ப்பாணம் பிரவுன்வீதியைச் சேர்ந்த அந்தோனி கானிக்கைமலருக்கு [வயது 18] கடந்த ஆனிமாதம் திருமண எழுத்து முடிந்து ஆவணி மாதம் திருமணம் நடைபெற இருந்ததாம். மணமகனின் சுகவீனம்காரணமாகக் குறித்த தினத்தில் திருமணம் நடைபெறவில்லையாம். இப்போது அவர் குணமாகிவிட்ட போதும் இரண்டு வருடங்களின் பின்னரே திருமணஞ் செய்யவேண்டுமென மகள் கூறியதைத் தொடர்ந்து தாய் அவரை வற்புறுத்தியதாகவும் சம்பவதினம் அவரிலிருந்து நச்சுநெடி வீசியதாகவும் தாம் விசாரித்தபோது நச்சுமருந்து குடித்துவிட்டதாகத் தெரிவித்ததாகவும் சொன்னாராம். மரண விசாரணையின்போது இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

விசாரணையை நடாத்திய திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு எஸ் எஸ் பிரான்சிஸ் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார் [கு-அ]

## சிவகுமாரன் அஞ்சலிக் கூட்டம் இன்று

[உரும்பிராய்]

தியாகி சிவகுமாரனது நினைவு தினத்தையொட்டி, இன்று மாலை, உரும்பராயிலுள்ள சிவகுமாரனது சிலை முன்பாக, அஞ்சலிக்கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

திரு ஆர். தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், மாவை சேனாதிராஜா, சந்ததியார், கோவைநந்தன், யாழ் நகரபிதா திரு. ஆர். விசுவநாதன் உட்பட பலர் உரையாற்றுவர். [செ]

# "சிறுவர்களே வருங்காலத்தில் அறிஞர்களாகத் திகழ்பவர்"

[யாழ்ப்பாணம்]

"இப்பொழுது உலகச் சிறுவர்தினம் கொண்டாடப்படுகிறது. கல்வி பயிலும் மாணவர்களை அறிவுத்துறையில் ஊக்குவிப்பதே அரசின் முக்கிய குறிக்கோள். இக் குறிக்கோளை நிறைவேற்ற ஆசிரியர்களும் பெற்றோர்களும், அபிமானிகளும் இதனை முழுவதுமாக பாடுபடவேண்டும். இப்பொழுது உள்ள சிறுவர்களே வருங்கால அறிஞர்கள் என்பதை யாம் மனதிற்கொள்ள வேண்டும்"

அகில உலக சிறுவர் வாரத்தையொட்டி உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவில் உரையாற்றிய அதிபர் திரு. வி. அரியநாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசிய பிரதிஅதிபர் திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில் "நூலறிவே யாகுமாம் நுண்ணறிவு" சிறுவர் தொடக்கம் பெரியோர் வரை எல்லோரது அறிவு வளர்ச்சிக்கும் நூலகம் இன்றியமையாதது. பாடசாலைகள் தோறும் நூலகங்கள் இடம் பெறவேண்டும். உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் உள்ள நூலகம் மேலும் விரிவுபடுத்தற்கு ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் அபிமானிகளது ஒத்துழைப்பு மேலும் வேண்டப்படுகிறது என்றார்.

சங்கீத ஆசிரியை திருமதி க. இராசேந்திரனின் நூலக

(6ம் பக்கம் பார்க்க)

# 'சிறுபான்மைச் சமூகம் அரசியல் ரீதியில் தான் தீர்வு காணமுடியும்"

## உடுப்பிட்டி எம். பி. கருத்து

[உடுப்பிட்டி]

"எனது அரசியல் வாழ்க்கை நான் சார்ந்த இயக்கத்துக்கு எதிரானதாகவோ, முரணானதாகவோ அமைந்ததில்லை. அரசியலையும், மக்களையும் பிரித்து விடமுடியாது. சமுதாய நன்மையை விரும்பியே அரசியலில் ஈடுபட்டேன் உடுப்பிட்டித் தொகுதியில் நான் எம். பி. யாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்பு சாதி ஒழிந்துவிட்டது என்று தமிழர் விடுதலைக் கூட்டணி கருதினால் அது பெருந்தவறாகும்"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. க. இராஜலிங்கம் வடமராட்சி சமூக சேவா சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

வதிரி கலாநிலைய மைதானத்தில் திரு. த. மணிசுந்தரம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. இராஜலிங்கம் மேலும் கூறியதாவது:

"தற்போது பிரதேச, சமய சாதி ரீதியாகத் தமிழ் இனம் பிரிந்திருக்கிறது. இதனைப் பயன்படுத்தித் தமிழ் மக்களைப் பிரிக்க அரசு முயல்கிறது எமது நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளே ஆதிக்கம்செலுத்தி வருகின்றன. தமிழ்இனம் உரிமைகள் நசுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இதே வேளையில் சிறுபான்மைச் சமூகம் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இன்று சமூகப் பிரச்சினை ஆலய பாடசாலை உத்தியோகப் பிரச்சினையாக இருக்கின்றது என்பதை மறந்துவிடக் கூடாது.

முஸ்லிம்கள் கூடுதலான பிரதிநிதித்துவத்தைப் பெற்றுள்ளதாலேயே அரசாங்கம் அவர்களது தயவை நாடுகின்றது ஒரு சமூகத்தை நசுக்கி ஒதுக்கிவிட்டு அரசியல் லாபம் பெற முயல்வது நியாயமற்றது தமிழ்இனத்தைப் பொறுத்தவரையில் ஆட்சியாளரை நம்பிப் பிரயோசனமில்லை.

சிறுபான்மைச் சமூகம் தமது உரிமைகளை அரசியல் ரீதியாகவே தீர்த்துக்கொள்ளமுடியும். இன்றையநிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியே சிறுபான்மைச் சமூகத்துக்கு விமோசனப் பாதையைக் காட்டிவருகின்றது. எனவே நாம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கொடுக்கும் நெருக்கடி மூலமே எமது சமூகம் விடிவுபெற முடியும்"

முன்னாள் உடுப்பிட்டி எம். பி திரு. கே. ஜெயக்கொடியும் பேசினார்.

## புனருத்தாரணக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மானிப்பாய் வட்டாரக்கிளை புனருத்தாரணக் கூட்டம் நாளை மாலை மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (கு-அ)





# சேர்கோப்பூர்

36% (3, 4, டீ. பீ. ஏ. கொண்டது)

சேர்கோப்பூர் 36%, (பட்ட மாத்திரத்திலேயே) சேறுள அல்லது உலர்ந்த நெல் வயலில் உள்ள நெற்சப்பி, கோழிச்சூடன், குதிரைவாற்புல், கிடைச்சி, கோரை, மொண்டி ஆகிய சகல களைகளையும் கட்டுப்படுத்தும் வன்மையான களைநாசினி, உச்சப் பயன் பெற, விதைத்து 7-21 நாட்களுள் சேர்கோப்பூர் தெளிக்க வேண்டும். களைகள் 2–3 இலை விட்டிருக்கும் காலத்தில் பாவிப்பதே மிகச் சிறந்தது, சேர்கோப்பூர் 36% பாவித்து நெற்களைகளைக் கட்டுப்படுத்தி விளைச்சலைக்கூட்டி இலாபத்தைப் பெருக்குங்கள்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. தொலைபேசி: 93563, 96331-6.

melADS

Rio (Jaffna) Phone: 7667
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Spy Who Went To Hell

நாகம்ஸ் (கன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
பாக்தாத் பேரழகி

## யோகேந்திராவுக்கு பாராட்டு

[வரிகாவத்துறை]

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்ற திரு யோகேந்திரா துரைசுவாமிக்கு நாரந்தனை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் பாராட்டுக்கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

பரந்த அறிவாற்றலும் கல்வித்தகைமையும் விரிந்த மனப்பாங்கும் உடைய நீங்கள் இப்பதவியை வகிப்பதையிட்டு எமது சங்கம் பெருமைப்படுகிறது என்று மேற்படி பாராட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கு-இ]

வெலிங்டன் (சுந்திவாசலை)
தினசரி: 3-00, 6-30 & 9-45
சனி, ஞாயிறு 10-30, 3-30, 6-30 & 9-45
எம்.ஜி.ஆர்.—சாவித்திரி
வேட்டைக்காரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7893 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—சரோஜாதேவி
என் தம்பி

23-வது வாரம்
வின்சர் (சுந்திவாசலை) போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(சிங்களம் கலர்)

REGAL (Jaffna) 3rd CROWDED WEEK
Daily 4-30, 7-30 & 9-00 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் – தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
[புதிய பிரதி]

SHANTHI JAFFNA (Phone 7642)
Today only
Daily: 4 Shows
Rajendrakumar—Hema Malini—Banurekha
"GORA AUR KALA"
Hindi — Colour
MCMASTERS

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
கணவன்
[புதிய பிரதி]

ராணி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
கல்யாணகுமார் - விஜயகுமாரி
மணி ஓசை
(புதிய பிரதி)

ராஜா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒளி விளக்கு
புதிய பிரதி ஈஸ்ட்மன்கலர்

# "அரசின் இறக்குமதிக் கொள்கை விவசாயத்தைப் பாதிக்கிறது"

## இளம் விவசாயிகள் விழாவில் அமிர்

(சங்கானை)

'விஞ்ஞானரீதியில் புரட்சிகரமான விவசாய உற்பத்தியில் இன்றைய இளைஞர் சமுதாயம் ஈடுபட்டால்தான் எமது பொருளாதாரத்தில் மேம்பாட்டை அடையலாம். வருங்காலம் விவசாயத்தில்தான் தங்கியிருக்கின்றது'

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதி இளம் விவசாயிகள் கழகங்களின் பொருட்காட்சியிலும் விவசாய விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றுகையில் கூறினார்.

வட்டு. இந்துக் கல்லூரியில் அராலி இளம் விவசாயக் கழகத் தலைவர் திரு. சி. சிங்கராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:-

முன்னைய ஆட்சியின்போது எமது மக்கள் விவசாயச் செய்கையின்மூலம் சிறிது பயன் பெற்றனர். இதற்குக் காரணம் அப்போதைய ஆட்சியாளர் பணம் இன்மையால் மிளகாய், வெங்காயம், உழுந்து போன்றவற்றை இறக்குமதி செய்வதை நிறுத்திக் கொண்டமையே யாகும். ஆனால் தற்போதைய அரசு இவற்றை இறக்குமதி செய்வதால் விவசாயத்தில் ஈடுபட்ட பல இளைஞர்கள் அதனைவிட்டு மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பை நாடிச் செல்லுகின்றனர். இதனால் தமது சொந்த நாட்டில் நல்வாழ்வு வாழ முடியாது இருக்கின்றது. பணம் நிலையான வாழ்வைத் தராது.

'விவசாயத்தில் அரசு திட்டமிட்டு தமிழ் மக்களை நசுக்க எடுக்கும் முயற்சிக்கு மாறாக நாமும் கனிவர்க்கங்களை உற்பத்தி செய்து, மாம்பழம் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி அதிக பணம் சம்பாதிக்க முடியும். வெளிநாடுகளில் யாழ்ப்பாண மாம்பழத்திற்கு நல்ல கிராக்கியும் உண்டு என்பதை இளைஞர் உணர்ந்து சுய தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டு விவசாயக் கழகங்களின் உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்று புரட்சிகர சுபீட்ச வாழ்விற்கு அடிகோல இளைஞர் சமுதாயம் முன்வரவேண்டும்."

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு மங்கள விளக்கை ஏற்றிவைக்க, கழகக் கொடியை சமநல சேவை ஆணையாளர் திரு சே. பரமலிங்கமும் தேசியக் கொடியை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதனும் ஏற்றிவைத்தனர். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு நா. சிவமூர்த்திலிங்கம் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறியதாவது:-

"மனிதன் தனது சக்தியைப் பயன்படுத்தி நீர், நிலம், காடு போன்ற வளங்களைப் பேணிக் காப்பதுடன் அதன் பயனை நன்கு பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். விடாமுயற்சிதான் வாழ்வின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது.

விவசாயத்தில் ஈடுபடும் இளைஞர் மத்தியில் போட்டி மனப்பான்மை இருக்கவேண்டுமேயல்லாமல், அது பொறாமையாக மாறக்கூடாது" என்றார்.

விவசாயப் போட்டிகளில் வெற்றி சட்டியோர்க்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. வலி. மேற்கில் உள்ள எட்டு வி. கழகங்கள் பங்குபற்றின. தொல்புரம் விவசாய விஸ்தரிப்பு நிலைய பொறுப்பதிகாரி திரு ஏ. கிருஷ்ணர் விழாவிற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

"அரசின் இறக்குமதிக் கொள்கையால்

# வடபகுதி விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்

[உரும்பராய்]

"இறக்குமதிக்கொள்கை ஒரு திட்டவட்டமாக இருப்பதன் மூலமே நாட்டின் உற்பத்தியையும் பொருளாதாரத்தையும் பெருக்கமுடியும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையால் வடபகுதி விவசாயிகள் பாதிப்பும் விரக்தியும் அடைந்துள்ளனர்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் வலிகாமம் கிழக்கு இளம் விவசாயிகள் கழகங்களின் ஒன்றியத்தின் வருடாந்த விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"வடபகுதி விவசாயிகள் தற்போதைய நிலையில் தமது உற்பத்திப் பொருட்களை மாற்றவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளனர். எனவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருளை விவசாயிகள் உற்பத்தி செய்யவேண்டும்.

உரும்பராயில் மேற்படி வருடாந்த விழா நடைபெற்றது. வரவேற்புரை நிகழ்த்திய போஷகர் திரு. த. கிருஷ்ணராசா "விவசாயிகளிடையே உருவாகியுள்ள ஏக்கத்துடன் கூடிய தேக்கநிலையைப்போக்கி உத்தரவாத விலைத்திட்டம், மிகச் சிறு விவசாயிகளின் தவணை தப்பிய கடன் தள்ளுபடி என்பனவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டும்" எனக் கூறினார். கோப்பாய் எம். பி. திரு சி. கதிரவேலுப்பிள்ளையும் உரையாற்றினார். [இ]

# பெண் இனத்துக்கு பெருமை தருவது எது?

## விளக்கம் தருகிறார் பேராசிரியர்

[யாழ்ப்பாணம்]

"இலட்சியமும் குறிக்கோள்களும் உள்ள வாழ்வை உடைய பெண்களே பெண் இனத்திற்குப் பெருமைதேடித் தரத்தக்கவர்கள், இவர்கள் குடும்ப விளக்காக இருந்து பிறந்த வீட்டிற்கும், புகுந்தவீட்டிற்கும் பெருமையைத் தேடித்தர வேண்டும்"

இவ்வாறு இராமநாதன் கல்லூரி அதிபர் தலைமையில் 'பெண்ணின் பெருமை' என்னும் பொருளிபற்றி சிறப்புரையாற்றிய செஞ்சொற் கொண்டல் பேராசிரியர் சொ. சிங்காரவேலன் கூறினார்.

அவர் தொடர்ந்து தமது உரையில் கூறியதாவது:

பெண்கள் குடும்பவிளக்குகளாகத் துலங்கி குறிக்கோள், இலட்சியம் உள்ள வாழ்வு வாழ்ந்து நற்பயன்பெறுதல் வேண்டும் இதனால் தான் தெய்வப்புலவர் திருவள்ளுவரும் 'வாழ்க்கைத்துணை நலம்' என்னும் அதிகாரத்தை வைத்துள்ளார். பெண்கள் தமது வாழ்வை இலட்சியவாழ்வாக அமைத்துக் கொள்ளுதல்வேண்டும்.

பெண்மணிகள் தமது பிறந்தகத்திற்கும், புகுந்தகத்திற்கும் பெருமைதேடித்தருவது போல மங்கையர்க்கரசியார், திலகவதியார், புனிதவதியார் போன்ற பெரிய புராணப் பெண்மணிகளைப் போன்று நெறிநின்ற வாழ்வை அமைத்துக்கொள்ளவேண்டும். 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்' என்ற குறள் பெண்ணின் பெருமைக்கு நிட்பநுட்பம் செறிந்த சூத்திரம் போன்று விளங்குகின்றது

இளங்கோ படைத்த கண்ணகி இக்குறளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றாள் இன்று பல இடங்களிலே மகளிர்களுக்கு என்றே தனியான கல்லூரிகள் இருந்தாலும் ஈழவளநாட்டின் தலைசிறந்த கல்லூரிகளில் ஒன்றான இராமநாதன் கல்லூரி சேர் பொன் இராமநாதனின் புகழுடம்பிற்குச் சான்றாகும். [கா]

வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
ராஜன் - பானுமதி
பத்துமாதபந்தம்

## பரந்த அடிப்படை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மான ஆயத்தங்களையும் செய்யவேண்டும், சமய நூல்கள் இலக்கண இலக்கிய நூல்களை ஆக்கியும், பதிப்பித்தும் தமிழின் உரைநடை வரலாற்றிற்குத் திருத்தத்தையும், அழகையும் சேர்ப்பித்த நாவலர், தமிழ் மக்களின் வாழ்விலும், இலங்கைத் தேசிய மரபிலும் தன் ஆழமான தாக்கத்தினைப் பதித்திருக்கின்றார். அவர் தொடக்கிவைத்த அந்த மரபினை முன்னெடுத்துச் செல்லவேண்டியது எங்களின் வரலாற்றுக் கடமையாகும்.

"நாவலர் பெருமானின் இந்த நூற்றாண்டு விழாவினை எல்லா இயக்கங்களும் பங்கு கொண்டு சிறப்புறக் கொண்டாடவேண்டுமென்பது எமது அவாவாகும், கல்வி நிறுவனங்கள், எழுத்தாளர் இயக்கங்கள், சமய ஸ்தாபனங்கள், வேறு பொது அமைப்புக்கள் ஆகியவற்றினை ஒன்றுசேர்த்து இவ்விழாவை மேற்கொள்ள நாம் எடுக்கின்ற முயற்சியின் முன்னோடி நடவடிக்கையாக ஆலோசனைக் கூட்டமொன்றினை நடத்த உத்தேசித்துள்ளோம் இதிலே தவறாது கலந்து, எங்கள் முயற்சி நிறைவேற ஒத்துழைக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம். [கொ

